
ரிஸ்கு ரமழானின் சிறப்பான நல் அமல்களாம்

# இப்தார் இஃதிகாப் கியாமுல்லைல்

மவ்லவி ஸலாஹுத்தீன்

கண்டி ஹனபி மஸ்ஜித் - இஸ்லாமிய மத்திய நிலையம்



HAPPY RAMALAN & HAPPY 1997
WITH BEST COMPLIMENTS FROM

RAHMATH TRADING CO,

25 / 4 DAM STREET, COLOMBO -12.

இச்சிறு நூல் புனித கஃபா எதிரில் கருவாகி, ஹறம் சரீபில் கடந்த ரமழானில் எழுதப்பட்டு, மீலாதுந் நபி தினத்தில் உருவமைக்கப்பட்டது. யாவரும் நல்மனதுடன் படித்துப் பயன் பெறுவார்களாக! கியாமத்தில் கை கொடுக்கும்!

FREE NOT FOR SALE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CALENDER 1997

## JANUARY

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SUN | | 5 | 12 | 19 | 26 |
| MON | | 6 | 13 | 20 | 27 |
| TUE | | 7 | 14 | 21 | 28 |
| WED | 1 | 8 | 15 | 22 | 29 |
| THU | 2 | 9 | 16 | 23 | 30 |
| FRI | 3 | 10 | 17 | 24 | 31 |
| SAT | 4 | 11 | 18 | 25 | |

## FEBRUARY

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SUN | | 2 | 9 | 16 | 23 |
| MON | | 3 | 10 | 17 | 24 |
| TUE | | 4 | 11 | 18 | 25 |
| WED | | 5 | 12 | 19 | 26 |
| THU | | 6 | 13 | 20 | 27 |
| FRI | | 7 | 14 | 21 | 28 |
| SAT | 1 | 8 | 15 | 22 | |

## MARCH

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SUN | 30 | 2 | 9 | 16 | 23 |
| MON | 31 | 3 | 10 | 17 | 24 |
| TUE | | 4 | 11 | 18 | 25 |
| WED | | 5 | 12 | 19 | 26 |
| THU | | 6 | 13 | 20 | 27 |
| FRI | | 7 | 14 | 21 | 28 |
| SAT | 1 | 8 | 15 | 22 | 29 |

## APRIL

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SUN | | 6 | 13 | 20 | 27 |
| MON | | 7 | 14 | 21 | 28 |
| TUE | 1 | 8 | 15 | 22 | 29 |
| WED | 2 | 9 | 16 | 23 | 30 |
| THU | 3 | 10 | 17 | 24 | |
| FRI | 4 | 11 | 18 | 25 | |
| SAT | 5 | 12 | 19 | 26 | |

## MAY

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SUN | | 4 | 11 | 18 | 25 |
| MON | | 5 | 12 | 19 | 26 |
| TUE | | 6 | 13 | 20 | 27 |
| WED | | 7 | 14 | 21 | 28 |
| THU | 1 | 8 | 15 | 22 | 29 |
| FRI | 2 | 9 | 16 | 23 | 30 |
| SAT | 3 | 10 | 17 | 24 | 31 |

## JUNE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SUN | 1 | 8 | 15 | 22 | 29 |
| MON | 2 | 9 | 16 | 23 | 30 |
| TUE | 3 | 10 | 17 | 24 | |
| WED | 4 | 11 | 18 | 25 | |
| THU | 5 | 12 | 19 | 26 | |
| FRI | 6 | 13 | 20 | 27 | |
| SAT | 7 | 14 | 21 | 28 | |

## JULY

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SUN | | 6 | 13 | 20 | 27 |
| MON | | 7 | 14 | 21 | 28 |
| TUE | 1 | 8 | 15 | 22 | 29 |
| WED | 2 | 9 | 16 | 23 | 30 |
| THU | 3 | 10 | 17 | 24 | 31 |
| FRI | 4 | 11 | 18 | 25 | |
| SAT | 5 | 12 | 19 | 26 | |

## AUGUST

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SUN | 31 | 3 | 10 | 17 | 24 |
| MON | | 4 | 11 | 18 | 25 |
| TUE | | 5 | 12 | 19 | 26 |
| WED | | 6 | 13 | 20 | 27 |
| THU | | 7 | 14 | 21 | 28 |
| FRI | 1 | 8 | 15 | 22 | 29 |
| SAT | 2 | 9 | 16 | 23 | 30 |

## SEPTEMBER

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SUN | | 7 | 14 | 21 | 28 |
| MON | 1 | 8 | 15 | 22 | 29 |
| TUE | 2 | 9 | 16 | 23 | 30 |
| WED | 3 | 10 | 17 | 24 | |
| THU | 4 | 11 | 18 | 25 | |
| FRI | 5 | 12 | 19 | 26 | |
| SAT | 6 | 13 | 20 | 27 | |

## OCTOBER

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SUN | | 5 | 12 | 19 | 26 |
| MON | | 6 | 13 | 20 | 27 |
| TUE | | 7 | 14 | 21 | 28 |
| WED | 1 | 8 | 15 | 22 | 29 |
| THU | 2 | 9 | 16 | 23 | 30 |
| FRI | 3 | 10 | 17 | 24 | 31 |
| SAT | 4 | 11 | 18 | 25 | |

## NOVEMBER

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SUN | 30 | 2 | 9 | 16 | 23 |
| MON | | 3 | 10 | 17 | 24 |
| TUE | | 4 | 11 | 18 | 25 |
| WED | | 5 | 12 | 19 | 26 |
| THU | | 6 | 13 | 20 | 27 |
| FRI | | 7 | 14 | 21 | 28 |
| SAT | 1 | 8 | 15 | 22 | 29 |

## DECEMBER

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SUN | | 7 | 14 | 21 | 28 |
| MON | 1 | 8 | 15 | 22 | 29 |
| TUE | 2 | 9 | 16 | 23 | 30 |
| WED | 3 | 10 | 17 | 24 | 31 |
| THU | 4 | 11 | 18 | 25 | |
| FRI | 5 | 12 | 19 | 26 | |
| SAT | 6 | 13 | 20 | 27 | |

## நோன்பு நேர அட்டவணை (இலங்கைக்கு மட்டும் உரியது)

## RAMALAN FASTING TIME TABLE (ONLY FOR SRI LANKA)

| ஜனவரி திகதி | IMSAK ஸஹர் முடிவு | IFTHAR மஃரிபு | பெப்ரவரி திகதி | IMSAK ஸஹர் முடிவு | IFTHAR மஃரிபு |
|---|---|---|---|---|---|
| 11-12 | 5.58 | 7.11 | 01-02 | 6.04 | 7.20 |
| 13-15 | 5.59 | 7.12 | 03-07 | 6.05 | 7.20 |
| 15-16 | 6.00 | 7.14 | 07-10 | 6.05 | 7.21 |
| 17-21 | 6.01 | 7.15 | 10-12 | 6.04 | 7.21 |
| 22-24 | 6.02 | 7.16 | 12-16 | 6.04 | 7.22 |
| 25-29 | 6.03 | 7.18 | | | |
| 30-31 | 6.04 | 7.19 | | | |

இந்த அருமையான சிறு நூல் ஏக காலத்தில் மூன்று நாடுகளில் இரண்டு லட்சம் பிரதிகள் அச்சாகியுள்ளன. இலங்கையில் மட்டுமின்றி மலேசியா, சிங்கப்பூர், புருனை, எமிரேட் நாடுகள், இந்தியா, ஹாங்காங், இங்கிலாந்து, கனடா, சுவிஸ் முதலிய நாடுகளிலும் வினியோகிக்கப்பட்டுள்ளது. எமது சிறு நூல்களை உலகின் எந்த நாட்டிலும் எந்த மொழியிலும் எவரும் அச்சிட்டு வினியோகம் செய்யலாம். அனுமதி பெறத் தேவையில்லை. நற்கூலி மறுமையில், சுவனத்தில் கிடைக்கும் இன்ஷா அல்லாஹ்! –சிற்றூழியன் ஸலாஹுத்தீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்தார் இஃதிகாப்

# கியாமுல்லைல்

அல்-ஹாஜ் மௌலவி H.ஸலாஹுத்தீன் (பாரி)
சமாதான நீதவான் தேசிய மட்டம்.
தலைமை இமாம் ஜாமிஉல் அஃலம்
ஹனபி ஜும்மா மஸ்ஜித்,
இஸ்லாமிய மத்திய நிலையம் கண்டி.
320, D.S.S. வீதி, கண்டி.

தொலைத்தொடர்பு 232039
224193
FAX 948-232187

கொழும்புத்தொடர்பு 582588
500087
FAX 941-586138

14, ALFRED HOUSE AV,
COLOMBO - 3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே பார்வையில்......

* முன்கூட்டியே நற்கூலி உத்தரவாதம் செய்யப்பட்ட ஒரு சிறந்த நல்அமல் 'இப்தார்' செய்விப்பது.

* 'இப்தார்' வைபவங்களால் சமுகத்தில் பரவலான நற் பயன்கள் ஏற்படக்கூடும்.

* 'இப்தார்' செய்விப்பதால் கிடைக்கும் சிறந்த உயர்ந்த நற்கூலிபற்றி நன்கு விளங்கியதாலேயே அரபிகள் மக்கா மதீனாவில் முண்டியடித்துக்கொண்டு இப்தார் செய்விக்கின்றனர்.

* நாம் நெடுநாள் வாழ்ந்து விட்டோம். மிஞ்சியுள்ள கொஞ்ச நாளைய போனஸ் 'ஹயாத்'தில் ஒரு தரமாவது 'ரமழான்' கடைசிப் பத்துநாட்கள் 'இஃதிகாப்' இருப்போம். முடியாவிட்டால் சில மணிநேரமோ, மணித்துளிகளோ இருப்போம்.

* 'ரமழான்' கடைசிப்பத்து நாட்களும் பின்னிரவில் எல்லா ஊர்களிலும் நீண்ட நெடிய தொழுகைகளை (கியாமுல்லைல்) ஏற்பாடு செய்வோம்.

* ஹயாத்தில் ஒரே ஒரு தரமாவது பதட்டம், தடுமாற்றம் அவசரமுமின்றி-அடக்கமாக 'தஜ்வீத்' முறைப்படி 'குர்ஆனை' ஓத முயல்வோம்.

* 'ரமழானில்' ஒரு 'உம்றா' நபிநாயகத்துடன் செய்யும் ஒரு 'ஹஜ்ஜை' ஒத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அல்லாஹ்வின் நல்லடியார்களே!
இச்சிறு நூலை நல்ல 'நிய்யத்'துடன் கையில் எடுத்துப் படிப்போருக்கும், படிக்கக்கேட்போருக்கும் இறையருள்கிருபை 'ரஹ்மத்' கிடைக்குமாக!

இச்சிறு நூல் ஞாலத்தின் முதல் ஆலயமாம் பரிசுத்த திருக் 'கஃபா' எதிரில்-அல்லாஹ்வின் அருள் சுமந்துவந்த 'ரமழான்' மாதத்தின் கடைசித்தினத்தில் ஹறம் சரீபிலே இஃதிகாப் இருந்தவண்ணம் எழுத ஆரம்பிக்கப்பட்டது.

மக்கா ஹறமின் பாபுல் உம்றா எனும் 79வது வாசலை அடுத்து இந்நூலின் நற்பயன் வேண்டி, இஸ்திகாறாத் தொழுது நாலே சொற்கள் எழுதப்படும் போது 'ழுஹர்' தொழுகைக்கான அதான் வானைப்பிழக்கும் ஓசையில் ஹறம்சரீபின் எல்லாத்திசைகளிலும் முழங்கிற்று.
அல்ஹம்துலில்லாஹி!

ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்யத் துவங்கும் வேளையில் ஒரு விடயம் பேச ஆரம்பிக்கும்போது காத்திராப்பிரகாரம் 'அதான்' சப்தம் குறுக்கிட்டால் அது 'நல்ல சகுனம்' என்று என் நல்லாசான் சொல்லக் கேட்டுள்ளேன்.

இச்சிறு நூல் சீர்மிகு 'ரமழானி'ன் சிறப்பான நல் அமல்களாம் இப்தார், இஃதிகாப், கியாமுல்லைல் பற்றிய முழுவிளக்க நூலாக இல்லாவிட்டாலும், முஸ்லிம்கள் இந்த அமல்களை உடனடியாகவே 'ரமழானி'ல் ஊர்களில் ஆரம்பிக்கப்பட வேண்டியபடியால் சிறுவிளக்கம் தரப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இப்தார்', 'இஃதிகாப்' நம் ஊர்களில் குறைந்த மட்டத்திலாவது நடைபெற்றுவர வழி காண்போம்.

புனித மக்கா மதீனாவில் பல்லாண்டுகளாகவே சிறப்பாக நடந்துவரும் 'கியாமுல்லைல்' தொழுகை இலங்கையில் கொழும்பு மற்றும் சில ஊர்களில் அண்மைக்காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டு வருகிறது. எமது கண்டியைப் பொறுத்தமட்டில், காசல் வீதி, ஹனபி மஸ்ஜித் ஜமாஅத்தார் ஆதரவுடன் 1996 பெப்ரவரி 10-20 வரை முதல்முறையாக ஆரம்பிக்கப்பட்டது. அதேகாலத்தில் 'இஃதிகாப்' அமலும் அனுஷ்டிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

'இஃதிகாப்', 'கியாமுல்லைல்' பற்றி ரமழான் ஆரம்பத்தில் எடுத்துக்கூறப்பட்டபோது, கண்டி வாழ் முஸ்லிம்கள் மட்டுமின்றி, அக்கம் பக்க 'மஹல்லா' வாசிகளும் மிகுந்த ஆர்வத்துடன் அவற்றைச் செயல் படுத்த முன் வந்தனர்.

அவர்களுக்காக நாம் கொடுத்த நன்றிக்காணிக்கை யாதெனில், 10.02.96 வெள்ளிியிரவு மதீனாவிலிருந்து இஹ்றாம் அணிந்து மக்கா வந்து புனிதம் பூத்த 'கஃபா'வைக் கண்டஉடனே, "யாஅல்லாஹ் எமதுகண்டியில் "இஃதிகாப், கியாமுல்லைல்" ஆகிய இரண்டு அழகிய 'ஸுன்னத்'தான வணக்கங்களையும் ஏக காலத்தில் 'ஹயாத்'தாக்க முன்வந்த உன் நல்லடியார்களை நீ உவந்து ஏற்று, ஆட்கொண்டு, அவர்களின் இம்மை மறுமை விடயங்கள் அனைத்தையும் பொறுப்பேற்று நல்லபடியாக நடாத்தித் தருவதோடு, உன் பெயரால் விடுக்கப்பட்ட அழைப்பினை ஏற்றவர்களுக்கு உன்தகுதிக்கு ஏற்ற நற்கூலியினை நல்குவாயாக!" என்று 'துஆ' செய்ததுமல்லாமல் அந்த அருமையான "ரமழான் உம்றா ஸபரில்" தினமும் தவறாமல் பலமுறை துஆச் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்தார், இஃதிகாப், கியாமுல்லைல்" என்ற மூன்று அமல்களுமே ரமழானின் அழகான நல் அமல்கள் மட்டுமல்ல; மஸ்ஜிதுந்நபவிய்யில் நபி (ஸல்) அவர்களால் செய்து காட்டப்பட்ட நற்கிரியைகளாகும்.

நபி தம் அழகான 'ஸுன்னத்'துக்களில் அனேகமானவை அண்மைக்காலம் வரை முஸ்லிம்களால் பொடு போக்காகக் கைவிடப்பட்டிருந்ததை நாமறிவோம்.
இந்தக்காலத்தில் அவற்றுக்கு உயிரோட்டம் கொடுக்கும் போது 100 'ஷஹீத்'களின் நற்கூலி நம்மைத்தேடி வந்தடையும்.
பஸாதுகளும், பித்னாக்களும் நிறைந்த ஸமானில் ஒரு பக்கம் பாரிய தீன் எழுச்சி உலகில் நாலாபக்கமும் ஏற்பட்டுவருவதை யாவரும் அவதானிக்கலாம். 1000 ஆண்டுகளுக்குப் பிறகு உலகில் ஏற்பட்ட சிந்தனைப்போக்கு மாற்றத்தால் பெரும் 'தஃவா'ப்புரட்சி 'நபிஸுன்னத்' முறைகளைத் தேடிப்பிடித்து அனுஷ்டிக்கும் ஆர்வத்தை 'உம்மத்'திடம் உண்டாக்கிவிட்டது.
நல் 'அமல்'கள் என்று எதைஎதையோ செய்துகொண்டிருக்கும் எமக்கு நற்கூலி உத்தரவாதம் தரப்பட்ட இந்த 'அமல்'கள் நிச்சயம் ஈடேற்றம் தேடித்தரும்.
முழுமனித சமுதாயத்திற்கும் நாயனே உண்மையான 'ஹிதாயத்தை நசீபாக்கி,' அவர்களின் ஹிதாயத்திற்கு எம்மைக் காரணமாக்குவாயாக!
இச்சிறு நூலை நீ உவந்து ஏற்று, இரண்டுலட்சம் பிரதிகளையும் முழு உலகத்திலும் தமிழ் அறிந்த முஸ்லிம்களின் கைக்கும், கண்ணுக்கும், 'கல்பு'க்கும் எட்டச்செய்து, எமது 'மீஸான்' வரை கொண்டு வந்து சேர்ப்பாயாக!

இஸ்லாத்தின் அற்ப ஊழியன்
எச். ஸலாஹுத்தீன்.
சுயேச்சையான சர்வதேச இஸ்லாமியப் பிரச்சார இயக்கத்தின் முதல்வர்.
கண்டி

புனித மக்காமுகர்ரமா.
பிறை 29 ரமழான் 1416.
19.02.1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இப்தார்'

இறை மறை இறங்கிய இனியமாதமாம் 'ரமழான்' மாதத்திலே ஏனைய காலங்களில் அனேகமாக எம்மிடம் இல்லாத சிறந்த பழக்க வழக்கங்கள் பல எம்மிடம் ஒட்டிக்கொள்கின்றன.

'ரமழான்' நோன்பு காலத்தில் நாம் செய்யும் அதி உன்னதமான அமல்களில் முன்னணியில் வைத்துப்போற்றத் தக்கது 'இப்தார்'. நாம் நோன்பு திறப்பதுமல்லாமல், பிறரையும் நோன்பு திறக்கப்பண்ணுவது. நபிகள் நாயகம் (ஸல்)காலம் தொட்டு முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் நோன்புதிறக்கப்பண்ணி வந்துள்ளனர். "யாரேனும் ஒரு நோன்பாளியை ஒருவர் நோன்பு திறக்கப்பண்ணுவாரானால், அந்த நோன்பாளி (நோன்புடன் அன்றைய தினம்) செய்த அனைத்து நன்மைகளின் அளவு திறப்பித்தவருக்கும் கிடைக்கும். எனினும், நோன்பு திறந்தவருடைய நன்மையில் சிறிதளவும் குறைக்கப்பட மாட்டாது" என்பதாக நபி(ஸல்) அவர்கள் உத்தரவாதம் தந்துள்ளார்கள்.

எனவே எந்தவொரு நோன்பாளியையும் 'இப்தார்' செய்விக்க- நோன்பு திறக்கப்பண்ண நாம் தயங்கக்கூடாது.

நபியின் உம்மத்துக்கள் பெற்றோரையும்,உற்றார் உறவினர் களையும், அயலவர்களையும், ஏழை எளியவர்களையும், நண்பர்களையும், தம்கூட அமர்த்தி 'இப்தார்'நோன்புதிறக்கப் பண்ணுவது தொண்டு தொட்டு இருந்துவரும் ஒரு அருமையான நல்லபழக்கம்.

முன்னைய காலங்களில் இது நம்மிடம் குறைந்த அளவில் இருந்து வந்தபோதிலும், அண்மைக்காலத்தில் பாமரமக்கள் மட்டுமின்றி,நம் நாட்டின் 'ஜமாஅத்'கள், இயக்கங்கள், அமைப்புக்கள், சங்கங்கள், போலவே இலங்கையிலுள்ள இஸ்லாமியநாடுகளின் ராஜதூதுவராலயங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச விமானக் கம்பெனிகளின் இலங்கைக்கிளைகளும் 'இப்தார்' நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதை நாம் யாவரும் நன்கு அறிவோம். பெண்கள் கூட ஒருவரை யொருவர் அழைத்து 'இப்தார்' செய்வித்து கண்ணியப் படுத்துகின்றனர்.

சமுதாயத்தின் கீழ்மட்டத்திலுள்ள - வசதிகுறைந்த ஏழை எளிய மக்களை மட்டும் அழைத்து பிச்சை போடுவது போல் செய்விப்பது அல்ல 'இப்தார்'. உறவினர்கள், அயலவர்கள், சமுதாயத்தில் வசதிபடைத்த செல்வந்தர்களையும் இப்தார் வைபவங்களில் கலந்துக்கொள்ளச் செய்ய வேண்டும். அப்போது தான் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், செல்வந்தர் களுக்கும் நெருக்கமான-இறுக்கமான உறவு 'இப்தார்' மூலம் ஏற்பட முடியும்.

இரு சாராருக்குமே நோன்பின் மூலம் ஏற்பட்டுள்ள பசி, தாகஉணர்வுகள் 'இப்தார்' வேளையில் சமமாக இருக்கும்.

இதனால் வறியோரைப்பற்றி செல்வந்தர்கள் சிந்திக்க-செயலாற்ற முடியும்.

தற்காலத்தில் 'இப்தார்' வைபவங்களில் உருப்படியான நல்ல திட்டங்கள் சமுதாய நலன் கருதி எடுத்துக்காட்டப் பட்டுச் செயல் படுத்தப்படுகின்றன. சில இடங்களில் (முதாக்கறா) சொற்பொழிவுகளும் இடம் பெறுகின்றன.

ரமழான் காலத்தில் இரவு பகலாக தொழுகை, பயான், குர்ஆன் திலாவத், திக்று, துஆ என்பன பரவலாக நடைபெற்ற போதிலும், இப்தாருடைய வேளையில் ஒரு அடியான் அல்லாஹ்வுக்கு மிகவும் நெருங்கிச்செல்கிறான். அந்த வேளையில் தனியாகவோ, கூட்டாகவோ, தியானத்தில்-திக்றில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஸ்பீஹில், ஸலவாத் ஓதலில், துஆ வில் மூழ்கலாம். 'துஆ' க்கள் ஏற்கப்படும் வேளை அது.

பரிசுத்த மக்கா மதீனா ஹறம் சரீப்களில் 'இப்தார்' நிகழ்ச்சிகள் கண் கொள்ளாக்காட்சிகள்!

சிறு குழுக்களாகவும், பெரும் பெரும் கூட்டமாகவும் இப்தார் செய்யும் முறையை அப்பப்பா.............. எப்படித்தான் வருணிப்பதோ!
அந்த அழகினை எவருக்கும் எடுத்து விளக்கவோ சொல்லிக்காட்டவோ முடியவே முடியாது.

நண்பகல் 'லுஹர்' தொழுகை 'ஜமாஅத்' முடிந்த உடனே விரிப்புக்களை விரித்து, ஏற்பாடுகளை மேற் கொண்டு, 'அஸர்' முடிந்தவுடன், 'இப்தாரு'க்கான உணவுப்பதார்த்தங் களைப் பரத்த ஆரம்பித்துவிடுவார்கள்.

ஹறம்சரீபுக்குள் 'இஃதிகாப்' அனுஷ்டிப்பவர்களையும், தொழுகை, தவாப், 'குர்ஆன் திலாவத்' திற்காகவருவோரையும் தமது அணியில் அமர்ந்து 'இப்தார்' செய்யுமாறு கெஞ்சி அழைப்பார்கள் அரபிகள்.

கைகளைப்பிடித்து, அன்பாக முகத்தில் தாடியைத்தடவி, பணிந்து, குழைந்து அழைக்கும்பாணியே அலாதியானது. புனித மிக்க 'கஃபா' வை 'தவாப்' செய்து கொண்டிருப் போருக்கும் வகைவகையான பேரித்தம் பழங்களை-பச்சை, காய்ந்தது, அரைப்பழம், முக்கால்பழம், பழுத்துப் பாணிவடிவது, ஒரேபழத்தில் அரை வாசி பழம், அரைவாசி பச்சை இப்படியான கனிகளை எல்லாம் பகிர்ந்தளிப்பார்கள். பேரித்தம் பழத்தில் தான் எத்தனைரகம்! எத்தனைசுவை!! சிலர் பேரித்தம்பழத்தில் விதை நீக்கி உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பட்டிவைத்து, முந்திரிப்பருப்பு, பாதாம், பிஸ்தா நுழைத்து, எள்ளில் உருட்டி, கடுகு, கருஞ்சீரகம் தெளித்து 'இப்தாரு'க்கு வழங்குவர்.

பால்,தயிர்,மோர், ஆரஞ்சுப்பழச்சாறு,பாக்கட்டில் அடைக்கப்பட்ட முந்திரிப்பழ,ஆப்பிள் பழ, மாம்பழச்சாறுகள், வடை,பெட்டிஸ், சமுசா போன்ற சூடான பதார்த்தங்கள்,ரொட்டி முதலியனவும். பரிமாறுவார்கள்.

ஆனால் புனித மக்கா மதினா ஹறம்களில் நம் நாட்டில் புழக்கத்திலுள்ள நோன்புக்கஞ்சி பரிமாறப்படுவதில்லை. எனினும் சுக்கு, வசம்பு,ஏலம் மற்றும் பல்வகை மூலிகைகள் கலந்த 'கஹ்வா' எனும் கோப்பி தாராளமாக எல்லா அரபிகளும் சட்டிசட்டியாக முட்டிமுட்டியாக தலையிலும், தோலிலும் சுமந்து வந்து 'கஃபா' முன்னிலையிலும், மக்கா மதீனா ஹறம்களிலும் 'இப்தார்' செய்வோருக்குத் தாராளமாக-இலவசமாகவே வழங்கிக் கொண்டிருப்பர்.

அரச குடும்பத்தை சேர்ந்தவர்களும்,அரபு சேக்மார்களும்,பெரும் அரபுச்செல்வந்தர்களும் இத்துணை சிரமப்பட்டு, உலகில் பலபாகங்களிலுமிருந்து மக்கா மதீனாவுக்கு ரமழானில் உம்றாச்செய்ய வந்துள்ளவர்களை இவ்வளவு பணிவன்புடன் ஏன் ஆதரித்து,உபசரித்து 'இப்தார்' செய்விக்கின்றனர் என்று நான் வெகுவாக சிந்தித்தேன். இந்தப்புண்ணிய காரியத்தில் முகத்துதி இல்லை, உணவில் பாகுபாடில்லை; நேரம் முன்பின் இல்லை; நற்கூலி உத்தரவாதம் செய்யப்பட்டு விட்டது.'அல்லாஹ்'தானே கூலியாகிவிட்டதாகவும்", "தன்தகுதிக்கு ஏற்பதருவதாகவும்", நோன்பாளி செய்த நல்அமல்கள் அனைத்தின் நற்கூலியையும், அவருக்கு எக்குறையும் ஏற்படாதவிதத்தில் 'இப்தார்' செய்வித்தவருக்கும் கிடைப்பதாக உத்தரவாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான உத்தரவாதம் இஸ்லாத்தின் கண்ணோட்டத்திலே வேறெந்த விருந்துக்கோ, அன்ன தானத்துக்கோ இருப்பதாகத் தெரியவே இல்லை.

எனவே, என் அன்புக்குரிய நன்மக்களே!

எல்லா ஊர்களிலும், 'மஹல்லா'க்களிலும், தனிப்பட்ட வீடுகளிலும், தமது தகுதிக்கும், தோதுக்கும் ஏற்ப 'இப்தார்' வைபவங்களைத் தாராளமாக ஏற்பாடு செய்யுங்கள்! அனைவருக்குமே 'இப்தார்' அழைப்புக்கள் கிடைக்கட்டும். 'இப்தார்' பெரிய விருந்துகளாக-மித மிஞ்சிய சிலவுகளில், கடப்பான முறையில் அமையவேண்டும் என்றில்லை; சாதாரணமாக அவ்வப்பகுதிப் பாரம்பரியப் பதார்த்தங்களைவைத்து எளிய முறையில்-சிறிய மட்டத்தில் செய்யலாம். நாமும் செய்வோம்! 'இன்ஷா அல்லாஹ்' என்று இப்போதே 'நிய்யத்' வையுங்கள். 'மஸ்ஜித்' சமீபமாக இல்லாத இடங்களில் 'இப்தார்' முடிந்த உடனே 'மஃரிப்' தொழுகையையும் அந்த இடத்திலேயே 'ஜமாஅத்' வைத்துவிடலாம்.

'இப்தார்' வைபவங்களுக்கு அழைக்கப்பட்டு, அங்கு செல்வோர் சொந்த இடத்தில் 'வுழு' எடுத்துக்கொண்டு செல்வதும், நண்பர்கள் உறவினர்களில்லம்களானால் ஏதாவது சிறிய அன்பளிப்புக்கள் (மரக்கறி, பழவகைகள், உணவுப்பொருட்களை) எடுத்துச்செல்வது இன்னும் சிறந்தது.

தவிர்க்க முடியாத காரணம் ஏதும் இருந்தாலொழிய 'இப்தார்' அழைப்புக்களைத் தயங்காது நாம் ஏற்பதே நல்லது. அது அவர்களுக்கு நாம் கொடுக்கும் கண்ணியமுமகும். நாமும் செல்லவேண்டும்; நம் வீட்டிற்கும் அழைக்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்களின் அழகான ஒருஸுன்னத்தை 'பித்னா' மிகுந்த இக்காலத்தில் நாம் உயிர்ப்பிப்போமாக! 'இப்தாரு'டைய நற்கூலி உத்தரவாதம் செய்யப்பட்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காகச் செலவு செய்யப்பட்டபணம் சேமிப்பாகி விட்டது. 'மௌத்து'டைய வேளையிலும், 'கப்றி'லும், 'கியாமத்'திலும், 'ஜன்னத்'திலும், இன்ஷா அல்லாஹ் அது பயன்படும்; கட்டாயம் கை கொடுக்கும்; சந்தேகமே இல்லை.

"சுவனத்தில் ஒரு தலை வாசலுண்டு; நோன்பாளிகள் தவிர வேறு எவரும் அதில் நுழைய மாட்டார்கள். அதன் பெயர் "ரய்யான்". -நபிமொழி-

நல்லனவற்றை நினைத்து, நல்லதேசெய்து, நல்லோராகுவோம்! 'மௌத்து' வரை 'இக்லாஸா'ன 'நிய்யத்'துடன் 'ஸாலிஹான' நல் 'அமல்கள்' செய்யும் பாக்கியம் நமக்குக்கிடைக்குமாக! நாமும் இந்த 'ரமழா'னில் ஒரு சிலருக்கு 'இப்தார்' செய்விக்க நல்லருள் செய்வாயாக!
அதற்கு சுவனத்தை நற்கூலியாகப் பெறுவோமாக! இன்ஷா அல்லாஹ்!

---

மதீனாவில் கண்ட ஸலவாத்

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ وَأَكْرِمْ عَلَى سَيِّدِنَا وَمَوْلَانَا مُحَمَّدٍ
صَلَاةً تَشْرَحُ بِهَا صَدْرِيْ وَتُسَهِّلُ بِهَا أَمْرِيْ وَتُيَسِّرُ بِهَا عُسْرِيْ
وَتَقْضِيْ بِهَا وَطَرِيْ وَ تَغْفِرُ بِهَا عُذْرِيْ
وَتَرْفَعُ بِهَا ذِكْرِيْ وَ تَدْفَعُ بِهَا ضُرِّيْ
وَتُجْبِرُ بِهَا كَسْرِيْ وَ تُغْنِيْ بِهَا فَقْرِيْ
وَتُطِيْلُ بِهَا عُمْرِيْ وَ تُنَوِّرُ بِهَا قَبْرِيْ
وَصَلَّى اللّٰهُ تَعَالَى عَلَيْهِ وَسَلَّمْ

16ம் பக்கம் பார்க்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இஃதிகாப்'

இஃதிகாப்' என்பது 'மஸ்ஜி'தில் அமைதியாகத் தரிபட்டிருப் பதைக் குறிக்கும்.

உரிய 'நிய்யத்'துடன், உறுப்புக்களின் அசைவுகள் அமைதி பெற்றபின் சிறிதுநேரமாவது ஒரு 'மஸ்ஜி'தில் தங்குவதால் அது ஏற்பட்டுவிடும்.

எதுவித நல் 'அமல்'களும் இல்லாமல் வெறுமனே 'மஸ்ஜி'தில் தங்கினாலும் 'இஃதிகாப்' நன்மை கிடைத்துவிடும். ஏதேனும் நல் 'அமல்'கள் நிகழின் இரட்டிப்புக் கூலி கிடைக்கும்.

நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்த ஒரு சிறநத வணக்கமாம் 'இஃதிகாப்' பற்றிய முழுமையான விளக்கம் இன்னமும் முஸ்லிம்கள் மத்தியில் சரியான முறையில் தெளிவில்லாதபடியால், இச்சிறு குறிப்புப் பரவலாக அறிமுகம் செய்யப்படுகிறது. லட்சக்கணக்கில் அச்சிட்டுப் பல நாடுகளுக்கும் பரவலாக வினியோகிக்கப்படுகிறது.
மதீனாவில்-மஸ்ஜித் நபவிய்யில் பாபுஸ்ஸலாம் வழியாக முதன் முதலில் நுழையும்போதே காணக்கிடைப்பது

نَوَيْتُ سُنَّةَ الاِعْتِكَافِ لِلّٰهِ

"(இம்மஸ்ஜிதில்) அல்லாஹ்வுக்காக 'ஸுன்னத் இஃதிகாப்' இருக்க நிய்யத் செய்தேன்" என்பதாகும்.

'இஃதிகாபி'ன் உண்மையான தன்மை அடியான் தன் எஜமான் முன்-அவன் சந்நிதானத்தில் தன் இதயத்தை நிம்மதி பெறச்செய்வதும், அவன் பக்கமே தன் கவனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாகச் செலுத்துவதுமாகும். அப்போது அவனுடைய முழுமையான ஈடுபாடும் அல்லாஹ்வுடனே இருக்கும். குர்ஆன் ஓதல், திக்று, தஸ்பீஹ், தொழுகைகளில் ஈடுபடுவது அதிவிசேடம். இ∴திகாபின் பலனை இரட்டிப்பாக்கும்.

ஒரு மஸ்ஜிதைக் குறிப்பிட்டு "அதில் தான் 'இ∴திகாப்' இருப்பேன்" என்று 'நிய்யத்' வைத்தால் அதிலேயே இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. அதில் இருப்பது ஏற்றமானது.

"எனினும் மக்காவிலுள்ள 'ஹறம்சரீபி'ல் இருப்பதாக 'நிய்யத்' செய்தால் கட்டாயம் அங்கேயே இருக்கவேண்டும்". ஒருவர் மதீனாவில் 'இ∴திகாப்' இருக்க நிய்யத் செய்தால் மக்காவில் இருந்து விட்டால் கூடிவிடும்.

அவ்வாறே ஒருவர் ஜெருஸலம் 'பைதுல் முகத்திஸ்' மஸ்ஜிதுல் அக்ஸாவில் 'இ∴திகாப்' இருக்க 'நிய்யத்' வைத்தார். அது கைகூடவில்லை. மக்காவிலோ மதீனாவிலோ இருந்து விட்டால் நிறைவேறிவிடும்.

மற்ற எந்த ஊரிலும் உள்ள எந்த மஸ்ஜிதும் இம் மூன்றுக்கும் ஈடாகாது; இணையாகாது. இவை மூன்றும் புனிதம் பூத்த பரிசுத்தத் திருத்தலங்கள்.

'இ∴திகாப்' வணக்கத்திற்கும் இம் மூன்றிடங்களும் அதிவிசேடமானவை. பரிசுத்த குர்ஆன் சரீபிலும், நபிமொழிகள் வாயிலாகவும் 'இ∴திகாப்' பற்றிக்கூறப்பட்டுள்ளது. 'இ∴திகாப்' என்ற வசனம் குர்ஆனில் பிரயோகிக்கப் பட்டுள்ளது.

'இ∴திகாப்' இருப்போருக்கான சட்டதிட்ட நடைமுறை விளக்கங்களுக்காக பகறாஸூறாவின் 187ம் திருவசனம் பார்வையிடுக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபகறாஸூறாவின் 125ம் திருவசனத்தில் தவாப்' எனும் திருக்க‘ஃபாவைச் சுற்றி வருவதோடு 'இஃதிகாப்' இணைக்கப்பட்டுள்ளது. குனிந்து, பணிந்து தொழுவோர் நிலை அடுத்து எடுத்தாளப்படுகிறது. 'இஃதிகாப்' ஒரு சிறந்த வணக்க வழிபாடு. 'வுழு' வுடனிடுப்பது விசேடம் என்றிருந்தாலும், 'வுழு' இல்லாவிடினும் பாதிப்பில்லை.

## இஃதிகாப் மூன்று வகைப்படும்.

1. நேர்ச்சை. "நேர்ச்சை 'இஃதிகாப்' என்பது ஏதேனும் ஒரு தேவை-ஒரு ஹாஜத்-ஒரு கோரிக்கை நிறைவேறுவதற்காக-நோய் நசல், பிணிநீங்குவதற்காக இத்தனை நாட்கள் 'இஃதிகாப்' இருப்பேன்" என்று நிய்யத் செய்தால் அவசியம் அதனை நிறைவேற்றி விடவேண்டும்-வாஜிப்.

2. 'ஸுன்னத்' ஏதேனும் ஒரு 'மஸ்ஜிதில்' எப்போதாவது நுழைந்தால் அங்கிருந்து வேலை முடிந்து வெளிவரும்வரை இருப்பது. இது 'நபிலா'ன 'இஃதிகாப்'. நம்யாவரும் எப்போதும் செய்யலாம்.

3. ரமழான் கடைசிப்பகுதி-10நாள் இஃதிகாப்:
இது விசேடமான ஒரு 'இஃதிகாப்'. மிகவும் பெறுமதி வாய்ந்தது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறப்பாகச்செய்து காட்டியது. அழகான ஸுன்னத்! இதனையே இங்குநாம் பெரிதும் வலியுறுத்துகிறோம்.

**பரிசுத்தஹதீசில் பதிவாகியுள்ளதாவது:**
"நமது அருமைத்தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எல்லா ரமழானிலும் கடைசிப்பத்து நாட்களிலும் 'இஃதிகாப்' இருந்தார்கள். தாம் இறையடி எய்திய-கடைசிஆண்டில் இருபது நாட்கள் 'இஃதிகாப்' இருந்தார்கள்". -ஸஹீஹுல் புஹாரியின்பதிவு.
'ரமழான்' கடைசிப் பத்துநாள் 'இஃதிகாப்' பற்றிய ஹதீஸ்கள் ஏராளம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய காலங்களை விட அண்மைக்காலத்தில் புனித மக்கா மதீனா சென்று, 'இஃதிகாப்' இருப்போர் தொகை பெருகிவருகின்றது. ஏறக்குறைய ஹஜ்ஜையொத்த யாத்திரிகர்கள் ரமழானில் மக்காவில் ஒன்றுகூடுகிறார்கள். இந்த விதமான சனப்பெருக்கத்திற்கு என்னால் மூன்று காரணங்களைக் குறிப்பிடலாம்.

1. "ரமழானில் செய்யும் ஒரு உம்றா என்னுடன் செய்யும் ஒரு ஹஜ்ஜை ஒத்தது" என்ற நபிமொழி.

2. 'ரமழான்' கடைசிப்பத்து நாட்களின் 'இஃதிகாபை' புனித மக்கா 'ஹறமி'ல் செய்வதற்கு அனைத்துநாட்டு மக்கள் காட்டும் ஆர்வம்.

3. 1000 மாதங்களை விடவும் மேலான புனிதமிகு 'லைலதுல்கத்ரி' இரவில் 'கஃபா' எதிரில் பலமணிநேரம் நிகழும் 'கியாமுல்லைல்' தொழுகையிலும், நீண்ட 'குனூத்'கூட்டு துஆ விலும் கலந்து கொள்வதில் காட்டப்படும் ஆர்வம்.

'இஃதிகாப்' இருப்பவர் வீண்பேச்சு, கேளிக்கை, கேலி பரிகாசங்களை விட்டுவிடவேண்டும்.

'இஃதிகாப்' இருப்பவர் மலசல உபாதைகள், உணவுக்காக தவிர்க்க முடியாத வேலை நிமித்தம், வுழு எடுப்பது, போன்றவற்றுக்காக மஸ்ஜிதிலிருந்து வெளியேவந்து போவதால் பாதகமில்லை.

**பெண்கள் இஃதிகாப்:** பெண்கள் இஃதிகாப் அனுஷ்டிப்பதற்குச் சிறந்த இடம் தங்கள் வீடுகளேயாகும். வீட்டில் ஒதுக்கமான ஓரிடத்தை ஒதுக்கி அங்கே இருந்து கொள்ளலாம்.

புனித மக்கா ஹறம் சரீபில் பெண்கள் தொழும் பகுதியில் விசேட இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கே பெண்கள் அநேகர் இஃதிகாப் அனுஷ்டிக்கின்றனர். மனைவியர் கணவர் அனுமதியுடனேயே 'இஃதிகாப்' அனுஷ்டிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இஃதிகாப்' இருப்போர் குடும்ப வாழ்வில் ஈடுபடுவது குர்ஆனின் வாயிலாகத்தடுக்கப்பட்டுள்ளது. அது இஃதிகாபை 'பாத்திலா'க்கி விடும் என்பதைக் கவனிக்கவும் நமது வாழ்நாளில் எஞ்சியுள்ள காலத்தில் ஒரே ஒரு 'ரமழானி' லாவது 10 நாட்கள் 'இஃதிகாப்' இருக்க முயற்சி செய்வோம். அல்லாஹ் உதவி செய்வான்!

தொடர்ந்து செய்ய முடியாத விடத்து ஒவ்வொருநாளும் இரவிலும் பகலிலுமாக அதிக நேரத்தில் 'இஃதிகாபி'ல் கடத்த இப்போதே 'நிய்யத்' வைத்தீர்களானால் இச்சிறு நூலை எழுதியதன் பயனை நான் பெறுவேன் இன்ஷா அல்லாஹ்! வரட்டும் ரமழான்! இருப்போம் இஃதிகாப்!!

11 ஆம் பக்கத் தொடர்ச்சி

## இந்த ஸலவாத்தின் கருத்தாவது

யா அல்லாஹ்! எம்பெருமானும் எம் தலைவரும் எம் காவலருமாகிய முஹம்மது(ஸல்) அவர்கள் மீது கண்ணியமும், பறக்கத்தும் புரிந்து எப்போதும் ஸலவாத்தும் ஸலாமும் பொழிவாயாக! அந்த மேலான ஸலவாத்தின் பொருட்டு என் இதயக் கமலத்தை விரித்து விசாலமாக்கி வைப்பாயாக!

என் காரியங்களை எளிதாக்கித் தருவாயாக, என் கஷ்டங்களை இலேசாக்கி வைப்பாயாக! என் தேவைகளை நிறைவேற்றி அருள்வாயாக, என் தவறுகளை மன்னித்து விடுவாயாக! என் பிரஸ்தாபத்தை மேம்படுத்தி வைப்பாயாக, என் தங்கடங்களைத் தட்டி விடுவாயாக! என் முறிவுகளைச் செப்பனிட்டுத் தருவாயாக, என் வறுமையைப் போக்கி வைப்பாயாக! என் ஆயுளை நீடித்துத் தருவாயாக, என் கப்றை வெளிச்சமாக்கியருள்வாயாக!

மவ்லவி எச். ஸலாஹுத்தீன் ஹனபி மஸ்ஜித் கண்டி. ஹிஜ்றி 1416ம் ஆண்டு புனித மக்காவில் ஹஜ்கடமை முடிந்து 07.05 1996ம் நாள் மதீனா முனவ்வறா வந்தடைந்ததும், இந்த அருமையான 'ஸலவாத்'தை அறபிகளிடம் பரவலாக்க கண்டேன். இதற்கு முன்னர் இங்கோ, வேறு எங்கோ நான் ஒருபோதும் காணாத கருத்துச் செறிவுமிக்க 'ஸலவாத்'உடனே என்னை மிகவும் கவர்ந்தது. நாம் தங்கியிருந்த ஹோட்டலில் எல்லா இடங்களிலும் சுவர்களில் அலங்காரமாக இந்த 'ஸலவாத்' ஒட்டப்பட்டிருந்தது கண்டு, நம் ஹாஜிகள் ஆவலுடன் இது பற்றி விசாரித்தனர். துஆ வுடன் கூடிய இந்த அருமையான ஸலவாத்தை முஸ்லிம்கள் ஓதிப் பயன் மிகப் பெறுவதற்காக வெளியிடுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கியாமுல்லைல்'

'கியாமுல்லைல்' எனும் "இரவு நின்று வணங்குதல்" கியாமத் நாள் வரை நிகழவேண்டும் என்ற ஆவலுடன் இச்சிறு குறிப்பு எழுதப்படுகிறது.
'கியாமுல்லைல்' என்ற வார்த்தையைக் கேட்கும் போதே காதும் கல்லும் சேர்ந்து இனிக்கின்றன.

சீர்மிகு மக்கா ஹறமிலும், சிறப்பான மதீனா ஹறமிலும் 'தஜ்வீது,தர்தீல்' முறைகள் பேணி அல்லாஹ்வின் அருள் மாமறையாம் குர்ஆன் அகிலத்தாருக்கு- "அவன் விரும்பும் பாணியில் ஓதிக்காண்பிப்பதற்கென்றே படைக்கப் பட்டவர்கள் தானோ இவர்கள்" என்று நினக்கும் அளவு இனிய குரலில் 'கியாமுல்லைல்' எனும் இரவுத்தொழுகையில் ஓதுவது அதோ கேட்கின்றது!

ரமழான் பகல் காலத்தில் நோன்பிருக்கும் முஸ்லிம்கள் இரவு வேளைகளில் குர்ஆனைப் பாராயணம் செய்து ஓதுவதுடன், நீண்ட நெடிய தொழுகைகளில் ஈடுபடுவர். அதனையே நாம் 'கியாமுல்லைல்' என்கிறோம்.

'இஷா'த்தொழுகை முடிந்து 'பஜ்ரு' வரையுள்ள நேரங்களில் தொழும் ஸுன்னத்தான நபிலான தொழுகைகள் யாவும் இதில் அடங்கும். ரமழான் மாதத்தில் நீண்ட நேரம், குறுகியநேரம் இரவு நின்று வணங்குவது பற்றிய குர்ஆன் ஆயத்துக்கள் தெளிவானவை.

"நேர்வழியில் நிற்கும் ஒரு கூட்டத்தினர் இருக்கின்றனர். அவர்கள் இராக்காலங்களில் அல்லாஹ்வுடைய வசனங்களை ஓதி (நின்று) சிரம் பணிந்து வணங்குகின்றனர்"

-குர்ஆன்- ஸூறாஆலுஇம்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸ்ஜிதுக்குச் செல்லும் வழியில் ஓதிக் கொண்டே செல்லும் அருமையான துஆ! நபி வழி வந்தது.

اَللّٰهُمَّ اجْعَلْ فِيْ قَلْبِيْ نُوْرًا وَّفِيْ بَصَرِيْ نُوْرًا وَّفِيْ سَمْعِيْ
نُوْرًا وَّعَنْ يَّمِيْنِيْ نُوْرًا وَّعَنْ شِمَالِيْ نُوْرًا وَّمِنْ خَلْفِيْ نُوْرًا
وَّمِنْ اَمَامِيْ نُوْرًا وَّاجْعَلْ مِنْ فَوْقِيْ نُوْرًا وَّمِنْ تَحْتِيْ نُوْرًا ،
اَللّٰهُمَّ اَعْطِنِيْ نُوْرًا وَّاجْعَلْ لِّيْ نُوْرًا وَّفِيْ عَصَبِيْ نُوْرًا وَّفِيْ
لَحْمِيْ نُوْرًا وَّفِيْ دَمِيْ نُوْرًا وَّفِيْ شَعْرِيْ نُوْرًا وَّفِيْ بَشَرِيْ
نُوْرًا وَّفِيْ لِسَانِيْ نُوْرًا وَّاجْعَلْ فِيْ نَفْسِيْ نُوْرًا وَّاَعْظِمْ لِيْ
نُوْرًا وَّاجْعَلْنِيْ نُوْرًا ، اَللّٰهُمَّ افْتَحْ لَنَآ اَبْوَابَ رَحْمَتِكَ وَسَهِّلْ
لَّنَآ اَبْوَابَ رِزْقِكَ ، اَللّٰهُمَّ اعْصِمْنِيْ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

يَآ اَيُّهَا الْمُزَّمِّلُ قُمِ الَّيْلَ اِلاَّ قَلِيْلاً نِصْفَهُ أَوِ انْقُصْ مِنْهُ
قَلِيْلاً اَوْ زِدْ عَلَيْهِ وَرَتِّلِ الْقُرْآنَ تَرْتِيْلاً.

اِنَّ رَبَّكَ يَعْلَمُ اَنَّكَ تَقُوْمُ اَدْنٰى مِنْ ثُلُثَيِ الَّيْلِ وَنِصْفَهُ وَثُلُثَهُ
وَطَائِفَةٌ مِّنَ الَّذِيْنَ مَعَكَ.

என்ற இருவசனங்களும் பனீ இஸ்றாயீல் ஸூறாவின் 109ம் திருவசனமும் "தஹஜ்ஜத்" தொழுகை பற்றியவை என்பதைக் கவனிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போர்வையைப் போர்த்திக் கொண்டிருப்பவரே! (நபியே!) இரவில் நீர் (தொழுகைக்காக எழுந்து) நில்லும். (முழு இரவிலுமல்ல; அதிலொரு) சொற்ப பாகம். (அதாவது;) அதில் பாதி (நேரம்). அதில் நீர் சிறிது குறைத்துக் கொள்ளலாம்; அல்லது, அதில் சிறிது கூட்டிக் கொள்ளலாம். (அதில்) இந்தக் குர்ஆனை (அழுத்தந்திருத்தமாக-நன்கு அவதானத்துடன்) ஓதும்" என்ற முஸ்ஸம்மில் ஸூராவின் முற்பகுதியிலும், கடைசிப்பகுதியில் "(நபியே!) நிச்சயமாக நீரும் உம்மோடிருப்போரில் ஒரு கூட்டத்தினரும் சற்றேறக் குறைய இரவில் மூன்றில் இரண்டுபாகம் அல்லது பாதி, அல்லது மூன்றில் ஒரு பாக நேரம் (இரவில் தொழுகையில்) நின்று வருகின்றீர்கள் என்பதை உமதிறைவன் நிச்சயமாக நன்கறிவான்."
என்ற திருமறையாம் குர்ஆனின் திருவசனங்களால் நின்றநிலையில் நின்று வணங்கும் 'கியாமுல்லைல்' தொழுகைகள் உற்சாகமூட்டப்படுகின்றன.

நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ் எனும் திருமொழி "எவர் ரமழானில் (உறுதியான) ஈமானுடனும், நன்மையை ஆசைவைத்துத் தேடியவராகவும், (இரவு) நின்று வணங்குகிறாரோ அவர் பாவங்கள் பொறுக்கப்படும்." என்றுள்ளது. "பெருமானார் (ஸல்) அவர்கள் தமது கால்களிரண்டும் வீங்கும் வரை நின்று வணங்குவார்கள்" என்ற அறிவிப்புக்கு ஒப்பவே நீண்ட நேரம் 'கியாமுல்லைல்' தொழப்படுகிறது. புனித மக்கா மதீனாவில் மட்டுமல்ல, உலகின் ஏகப்பட்ட நாடுகளில் தற்போது இந்தப் பின்னிரவு நின்று வணங்குதல் பின்பற்றப்படுகிறது. நம் நாட்டிலும் தற்போது பல ஊர்களில் 'கியாமுல்லைல்' தொழப்படுகிறது. ஜமாஅத்தாகத் தொழும் 'தராவீஹ்,' வித்ரு'த் தொழுகைகளையும் கியாமுல்லைலில் அடக்கலாம். பின்னிரவில் ஜாமத்தின் பிறகு 'தஹஜ்ஜுத்' தொழுகையும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதியிரவின் பின் தொழும் தொழுகைகளும், எல்லா நபில்களும் 'கியாமுல்லைல்' என்று அழைக்கத்தக்கவை. அவை "இவ்விரண்டு 'ரகஅத்' களாக அமைய வேண்டும்" என்பது நபிமொழி!

புனித மக்கா மதீனா இரண்டிலும் முன்னிரவில் லட்சக்கணக்கானோர் ஒன்று கூடி தறாவீஹ் 20 ரகஅத்கள் தொழுகின்றனர். அதையும் 'கியாமுல்லைல்' என்றே அழைக்கின்றனர்.

சிறிது ஓய்வெடுத்து, பின்னிரவில்-காலை ஒருமணியளவில் மீண்டும் தொழுது, வித்றும் தொழுது உருக்கமான-நீண்ட கூட்டான குனூத்'துஆ'வுடன் அதிகாலை 'ஸஹ்ரு'டைய வேளைவரை தொழுகின்றனர்.
"இந்த மேலான வணக்க வழிபாட்டுமுறை உயிரோட்டம் காண்பதற்கு நாம் நம் ஊர்களில் இதனை ஏற்பாடு செய்வோமாக!" என்று மிகுந்த ஆசையுடன் வேண்டுதல் செய்கிறேன். தயவு செய்து ஏற்பீர்களாக!

மேலான இந்தத்தொழுகையில் நின்றநிலையில் இனிமையாக குர்ஆனை ஓதுவதும் கேட்பதும் குழப்பம் நிறைந்த இன்றைய உலகுக்குப் பெரும் 'ரஹ்மத்'தாக அமையும். நமது கண்டி ஹனபி மஸ்ஜிதில் கடந்த 1996ம் ஆண்டு பெப்ரவரியில் இத்தொழுகை சிறப்பாக நடந்து முடிந்தது. அல்ஹம்து லில்லாஹ்!

பல மஹல்லாக்களிலுமிருந்து ஏராளமானவர்கள் வந்து பங்கு பற்றிக் கொண்டதும், சிலர் தமது 'ஸஹரு' உணவுடனேயே வந்து 'ஸுப்ஹு' வரை 'இஃதிகாப்' இருந்து சென்ற செய்தி எமக்கு மிகுந்த திருப்தியையும் சந்தோசத்தையும் நல்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு என்றும் அல்லாஹ் ரஹ்மத் செய்வானாக! தொடர்ந்தும் எதிர்வரும் ரமழான்களிலும் இதை விட ஆர்வத்துடன் பிரசன்னமாவார்கள் என்று எதிர்ப்பார்கிறோம்.

அவர்களுக்காக எமது தனிப்பட்ட துஆ எப்போதுமுண்டு. ஒரு நன்மையிலிருந்து இன்னும் பல நன்மைகள் உண்டாகுமேஒழிய தீமைகள் வரவே வராது.

நல்ல காரியங்களை யார் செய்த போதிலும் அதற்கு நம் ஆதரவை நல்குவோம்.

ரமழானுடன்.............

* 'ஸக்காத்','ஸதகா','கைறாத்' தான,தர்மங்கள் செய்வதற்குச் சிறந்த காலம் 'ரமழான்'. அதில் இரட்டிப்புப்பலன்.
* 'தஜ்வீது' முறைப்படி அழுத்தந்திருத்தமாக குர்ஆன் ஓதும் 'ஹிஸ்பு மஜ்லிஸ்'களை எல்லா ஊர்களிலும் 'ரமழான்' இரவு வேளைகளில் ஏற்படுத்துவோம்.
* 'பித்றா'வினியோகத்தை 'ரமழான்'துவக்கத்திலிருந்து 'ஈதுல் பித்று'த் தொழுகைக்கு முன்னதாகக் கொடுத்து விடுங்கள்!
* ஈத்-பெருநாள் தொழுகைகளைச் சிறுகூட்டங்களாக மஹல்லா மஸ்ஜித்களில் தொழுவதை விடுத்து, திறந்த வெளி மைதானங்களில், பிட்டனிகளில் பெருங்கூட்டமாகத் தொழுவதே சிறப்பு.
* ரமழானில்பழகும் உயர்குணசீலங்கள் 'ரமழான்'முடிந்த பிறகும் தொடர்வதோடு,'ரமழானி'ன் பிரிவுக்காக வருந்த வேண்டும்.
* 'சவ்வாலி'ன் ஆறு நோன்பு, பெரும் பயன்களைத் தரக்கூடியது. அதனை நோற்க 'நிய்யத்' செய்வோம். இன்ஷா அல்லாஹ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைச் செய்தி!

# இவ்வருட "உம்ரா" புனித மக்காவில் சாதனை ஆண்டு

## கஃபா எதிரில் தேசத் தலைவர்கள் பொதுமக்களுடன் "இப்தார்" விருந்தில்

-நன்றி- தினகரன் வார மஞ்சரி
'குர்ஆனின் குரல்' மதுரை, இந்தியா ஜூன் 96'

கடந்த ரமழான் மாதத்தில் புனித மக்காவில் உம்ரா யாத்திரைக்காகத் திரண்டமக்கள் கூட்டம் இந்த நூற்றாண்டில் மக்காவில் எப்பொதுமே கூடாத எண்ணிக்கையைத் தாண்டிவிட்டது. இதனால் ரமழான் உம்ராவில் இவ்வருடம் "சாதனை ஆண்டாக"வும் கணிக்கப்பட்டுள்ளது.

மூன்று தசாப்தங்ளுக்கும் மேலாக உம்ராவுக்கும், ஹஜ்ஜுக்கும், சென்று வரும் சன்மார்க்க அறிஞரான "கண்டிமௌலானா" அல்ஹாஜ் எச்.ஸலாஹுத்தீன் (பாரி) இவ்வாறு தகவல் தந்துள்ளார். அவர் இம்முறையும் உம்ராவுக்குச் சென்றிருந்தபோது 'தினகரனு'க்காகத் திரட்டிய பிரத்தியேகத் தகவல்கள் இங்கே தரப்படுகின்றன.

ரமழான் 27வது இரவு 'லைலத்துல் கத்ர்' வெள்ளி இரவாகவும் இருந்தது. ரமழான் ஆரம்பத்தில் இருந்தே பெரும் எண்ணிக்கையில் முஸ்லிம்கள் உம்ராவுக்கு வந்தவண்ணம் இருந்தனர். ஏறக்குறைய உலக நாடுகள் அனைத்திலிருந்தும் உம்ரா யாத்திரிகர்கள் புனித பூமியில் திரண்டனர்.

மக்கா, மதீனா இரண்டிலுமே தங்குமிடங்களுக்குத் தட்டுப்பாடு நிலவியதாக அறியமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருணை சுல்தான், எகிப்திய ஜனாதிபதி, பாகிஸ்தான் பிரதமர் உட்பட சகல முஸ்லிம் நாடுகளின் ஆட்சித் தலைவர்களாலும், பிரமுகர்களாலும் சவூதி மன்னரின் மக்கா மாளிகை நிரம்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.

மக்கா, மதீனா இரண்டிலும் பொதுமக்களின் "இப்தாரு"க்குச் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளோ கண்கொள்ளாக் காட்சிகள். அதற்கு ஈடிணை இல்லை.

ஒரு முஸ்லிமைக் கண்ணியப்படுத்த "இப்தார்-வலீமா" வைப் போன்று வேறு என்னதான் இருக்கிறது? அவற்றின் நற்கூலி உத்தரவாதம் அளிக்கப்பட்டு விட்டது.
தேசத் தலைவர்கள் புனித "ஹரம் ஷரீபி"ல் கஃபாவுக்கு எதிரில் பொதுமக்களுடன் "இப்தார்" செய்ய மன்னர் மாளிகை வட்டாரங்கள் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

புனித 27ஆவது இரவில் மக்காஹறமின் நான்கு மாடிகளிலும் ஈ புகவும் இடமிருக்கவில்லை. அரைவாசி யாத்திரிகர்கள் வெளியில்-பாதையில்-தொழுதமையும் குறிப்பிடத்தக்கது. இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ரமழானில் உம்ரா மக்காவில் இவ்வளவு பிரசித்தமாக அமையவில்லை.

இலங்கையில் இருந்தும் இம்முறை ரமழானில் கூடுதலானோர் உம்ராவுக்குச் சென்றிருந்தனர். கொழும்பி லிருந்து முதல் தடவையாக ஒரு விமானம் இம்முறை நேரடியாகவே மதீனாவுக்குச் சென்றது.

ரமழான் உம்ராவுக்கு இவ்வாண்டு வந்திருந்த யாத்திரிகர்களின் எண்ணிக்கையை உற்று நோக்கியபோது எதிர் வரும் காலங்களில் வருடத்துக்கு இருமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய அளவில் வெளிநாட்டவர்களின் செளகரியங்களை ஏற்பாடு செய்யவேண்டிய நிலைக்குச்சவூதி அரேபிய அரசு தள்ளப்படும் என்றும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ரமழான் "உம்ரா"வைச்செய்து முடிப்போர் ஐவேளை 'ஜமாஅத்' தொழுகை, இருபது 'ரக்அத் தராவீஹ்' தொழுகைதவிர பிரதானமாக இரண்டு 'அமல்'களைச் செய்கின்றனர்.

ரமழானின் கடைசிப் பத்து தினங்களிலும் "இஃதிகாப்" இரவு நீண்ட நேரம் நின்று வணங்குவது எனும் "ஸலாதுல் கியாமுல்லைல்" என்ற அதிகாலை தொழுகையிலும் கலந்து கொள்கின்றனர்.

நீண்ட நிலை, "ருகூஉ", "ஸுஜூது"களைக் கொண்ட இத்தொழுகையில் உணர்ச்சியுடன் மிகவும் இனிய குரலில் அல்குர்ஆன் ஓதப்படுகிறது. குர்ஆனை உலகத்தாருக்கு இவ்வளவு இனிய குரலில் ஓதிக் காண்பிக்கவே இந்த இமாம்கள் படைக்கப்பட்டார்களோ என்றும் என்னில் வினா எழும்பியது.

"வித்ரு" தொழுகையின் இறுதியில் இவர்கள் ஓதும் நீண்ட மிக நெடிய "குனூத்து" துஆவில் நிலைகுலைந்து உணர்ச்சிவசப்படாதோருக்கு இதயமே இல்லை என்றே கூற வேண்டும்.

உம்ரா வணக்கம் எந்தக்காலத்திலும் செய்யலாம், "ரமழானில் செய்யப்படும் ஓர் உம்ரா என் கூட நிகழ்த்தப்பட்ட ஒரு ஹஜ்ஜை ஒத்தது" என்ற நபிமொழி நன்கு உயிரோட்டம் பெற்றிருந்ததை அவதானிக்க முடிந்தது. இவ்வாறு மௌலவி ஸலாஹுத்தீன் (பாரி) தெரிவித்தார்.

எப்.எம்.பைருஸ்
தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் அறிமுகம்

முஹம்மது ஸலாஹுத்தீன் பின், மர்ஹூம் ஹாமித்லெவ்வை இலங்கையின் கல்ஹின்னை என்ற கிராமத்தில் பிறந்தவர். இந்தியாவிலும் இலங்கையிலும் கல்வி கற்றார்.

இந்தியா எங்கும் 'கண்டி மவ்லானா' என்று அன்பாக அழைக்கப்படுகிறார்.

17 வயதில் மௌலவிப் பட்டமும், இரண்டு ஆண்டுகளில் பாஜில் பட்டமும் பெற்றார்.

32 ஆண்டுகள் அரசாங்கக் கல்லூரிகளில் போதனாசிரியராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.

34 ஆண்டுகள் ஒரே மஸ்ஜிதில் பணியாற்றி வருகிறார்!

1957 முதல் இதுநாள் வரை இலங்கை வானொலி இவர் பேச்சுக்களை ஒலிபரப்பி வருகிறது.

இளம் வயதிலேயே எழுத்து, பேச்சுத் துறைகளில் ஈடுபட்டு, ஏறக்குறைய 50 நூல்கள் வரை எழுதி வெளியிட்டுள்ளார். பல நாடுகள் இவர் நூல்களை மறுபதிப்புச் செய்துள்ளன. இந்தியாவில் இவருடைய எல்லா வெளியீடுகளுமே மறு பதிப்புச் செய்யப் பட்டுள்ளன. இவர் வெளியிட்ட ஒரு 'ஸலவாத்' பல ஊர்களில் பல பதிப்புக்களில் இரண்டு லட்சம் பிரதிகளுக்கு மேல் அச்சிடப்பட்டுள்ளன. வெளிநாடுகள் பல இவருடைய சேவைகளைப் பெற்றுள்ளன. சர்வதேச மாநாடுகள் பலவற்றில் இவர் பங்கு கொண்டுள்ளார். 30-க்கும் அதிகமான நாடுகளில், சுமார் 100 நகரங்களில் இவர் குத்பா, பேருரை நிகழ்த்தியுள்ளார்.

வெளிநாட்டு நிறுவனங்கள், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் பல இவரைப் பேட்டி கண்டுள்ளன.

சர்வதேச வினியோகத்துக்காக சுமார் 40 விதமான கேசெட் நாடாக்கள் சிங்கப்பூரில் ஒலி,ஒளிப்பதிவு செய்யப்பட்டு வெளிவந்துள்ளன.

கண்டிப் பெரியாஸ்பத்திரி ஆலோசனைக்கமிட்டி, மத்திய இ.போ.ச போன்ற அரச கூட்டுத்தாபன நிறுவனங்களில் அங்கம் வகித்து வருவதுடன், அ.இ.மு.வி. பதிவாளர் சங்கம், கண்டி ஜம்மிய்யதுல் உலமா ஆகியவற்றில் தலைமைப் பதவிகளில் நீண்ட நாட்கள் இருந்து வருகிறார்.

இலங்கை அரசு அகில இலங்கைக்குமான சமாதான நீதவானாக (J.P.All Island) இவரை நியமித்து கௌரவித்தது.

உலகின் அதிக நாடுகளில் சொற்பெருக்காற்றியவர் என்பதற்காக தென்னிந்தியாவில் விருதும், பொற்கிழியும் கேடயமும் பெற்றார்.

சர்வதேச மட்டத்தில் தமிழ்மொழிக்கு இவர் ஆற்றிய தொண்டினைப்பாராட்டி தமிழகத்தின் உணவுத்துறை அமைச்சர் சென்னையில் விருதுவழங்கி கௌரவித்தார். சிங்கப்பூரிலும் "Rowing Ambassador of Islam" என்ற கௌரவப் பட்டம் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிபா பதிப்பக வெளியீடுகளில் சில
## (மௌலவி ஸலாஹுத்தீன் தொகுப்புக்கள்)

ஈமான் ஸலாமத்
ஹஜ் நடைமுறைகள்
மகளே கேள்! (2 பதிப்புக்கள்)
நபி மொழி நாற்பது (சிங்களம், தமிழ் - 2 பதிப்புக்கள்)
நான் கண்ட நாடுகள்
ஈழத்திலே தப்லீக் (3 பதிப்புக்கள்)
பெற்றோரும் பிள்ளைகளும் (பல பதிப்புக்கள்)
வெள்ளிக்கிழமை (8 பதிப்புக்கள்)
மிஸ்வாக்
பாலூட்டும் தாய்மார்கள் (2 பதிப்புக்கள்)
சாப்பிடுவது எப்படி ? (பதிப்புக்கள் 4)
உறங்கும் முறை
மலம் கழிக்கும் விதம்
முழுக்கை இறப்பது எப்படி (2 பதிப்புக்கள்)
தராவீஹின் சிறப்பு (5 பதிப்புக்கள்)
அல்-அக்ஸாவும் அல்பதற்றவும்
ஸலவாத் சிறப்பு
சாத்திரம் குறிகேட்பது குறிபார்ப்பது (2 பதிப்புக்கள்)
ஹிஸ்புந் நஸ்ரி
தௌபா
சிறார்களே சிந்தியுங்கள்
அருமையான ஔராதுகள்
ஹலாலும் ஹறாமும்
கண்திருஷ்டி (2 பதிப்புக்கள்)
ஏழு ஸூறாக்கள் (3 பதிப்புக்கள்)
ஓதுங்கள் ஸலவாத் (6 பதிப்புக்கள்)
"பைதுல் முகத்திஸ்"
மீஸான் தராசித்தட்டு
தாஜ் ஸலவாத்
அதிநவீனக்கட்டிடம் மஸ்ஜித் மதீனா
ஹிஸ்புல் பஹ்ரி (5 பதிப்புக்கள்)
முரீது பைஅத்
ளுஹாத்தொழுகை
யாசீன் மவ்லானா
இஜ்திமா '96
"இப்தார் இஃதிகாப் கியாமுல்லைல்"
மதீனாவில் கண்ட ஸலவாத்
திருமணப்பரிசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org